1984 மார்ச் 9]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்று ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி மாற்று ஏற்பாடு செய்யப்பட்டும் இன்றைய தினம் வரையில் சிகிச்சை அளிக்காத நிலை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நமக்கு சில நேரங்களில் பற்றாக் குறை ஏற்படுகின்றபோது, சர்வீஸ் கமிஷன் மூலமாக நாம் படிப்படியாக அந்தந்த காலி இடங்களை நிறைவு செய்து கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே ஒரு பெண் மருத்துவருக்கு அங்கே நாம் வாய்ப்புக் கொடுக்கிறோம். எனவே என்ன பிரச்சினை என்றால், சர்வீஸ் கமிஷனைக் கேட்கிறபோது அவர்கள், 900, 901 என்று இப்படி பிரியாரிட்டி பேசிஸில் கொடுக்கிறார்கள். அந்த பிரியாரிட்டி பேசிஸில் வருகிறபோது தான் நாம் நிரப்ப முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தின் அடிப்படையில் பெண் டாக்டர் யாராவது இருந்தால் அவர்களைப் போடுவதற்கு மீண்டும் பரிசீலனை செய்கிறோம்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் பிளாஸ்டிக் சர்ஜரி மற்றும் பீடியாட்ரிக் பிரிவுகள் அமைப்பதற்கான கோரிக்கை.

191 (*வினா 20446) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 'பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்' மற்றும் 'பீடியாட்ரிக் யூனிட்' அமைக்கக் கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டுக்கு கோரிக்கை ஏதும் இல்லை. பீடியாட்ரிக் சர்ஜரி யூனிட் அமைக்க கோரிக்கை வந்துள்ளது.

(ஆ) பீடியாட்ரிக் சர்ஜரி பிரிவு ஆரம்பிக்கும் கருத்துரு 1984—85-ம் பகுதி 2 திட்டத்தில் சேர்க்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று அங்கே தனியாக இல்லை என்றாலும், ஒரே ஒரு டாக்டரே, அந்தப் பிரிவில் இருந்து கொண்டு, மற்ற துறைகளில் இருந்து டாக்டர்களை துணைக்கு அழைத்து வைத்துக்கொண்டு, இந்தப் பணிகளை அங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த நிலைமைகளை கருதி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட்டை ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்? அத்தோடு, பீடியாட்ரிக் யூனிட்டை பி. ஜி. கோர்ஸ் தகுதிக்கு உயர்த்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே ஒரு சர்ஜரி டிபார்ட்மெண்ட் இயங்கிகொண்டு வருகிறது. அந்த சர்ஜரி டிபார்ட்மெண்ட்டே பிளாஸ்டிக் சர்ஜரி பணியையும் நடத்திக்கொண்டு வருகிறது. பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் என்று தனியாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை பலமுறை சொல்லியிருக்கிறார்கள். கேள்வியாகவும் கேட்டிருக்கிறார்கள். நானும், அதற்குப் பிறகு, அங்கே செங்கல்பட்டில் உள்ள அந்த மருத்துவ மனைக்குப் போய் பார்த்திருக்கிறேன். எனக்கும் அங்கே ஒரு பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் தேவைதான் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை நிச்சயமாகக் கவனிக்கப்படும். பிளாஸ்டிக் சர்ஜரி யூனிட் ஒன்று அங்கே நிச்சயமாக ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆயக்குடி அரசு மருத்துவமனை.

242(*வினா 19839) திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி அரசு மருத்துவமனையில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(ஆ) அங்கு பணிபுரியும் டாக்டர்கள் எத்தனை பேர் ?

(இ) பெண் மருத்துவர் இல்லாதிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) எனவே, பெண் மருத்துவரை நியமிக்க அரசு உத்தரவிடுமா ?